15th December 1961]

SRIMATHI SATHIAVANIMUTHU : முழுவதும் இந்திய மருத்துவமாக இருந்து, அதற்கு இந்திய மருத்துவ நிபுணர் ஒருவர் தலைவராக இருப்பாரா? அல்லது சதவிகிதத்தின்படி ஒதுக்கப்பட்டு, அதற்கு அலோபதி நிபுணர் ஒருவர் தலைவராக இருப்பாரா என்பதை இப்போதே அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த உள்நாட்டு முறை வைத்திய முறைக்கு ஒரு மருத்துவ நிலையம் ஏற்படுத்த உத்தேசித்து, ஒரு கமிட்டி ஏற்படுத்தி, அவர்கள் ரிப்போர்ட்டு கொடுத்திருக்கிறார்கள். இதிலே அடிக்கடி சங்கடம் வருகிறது. எந்த அளவுக்கு சித்த ஆயுர்வேதம் இருப்பது, இல்லை அதோடு வேறு மேல்நாட்டு முறையை கலப்பதா அல்லது கொஞ்சம் கலப்பதா என்ற சங்கடமெல்லாம் இருக்கிறது. அப்படி கொஞ்சம் கலந்தாலும், அது மேல்நாட்டு முறையாக போய்விடும். இதையெல்லாம் இன்னும் முடிவு செய்யவில்லை. மத்திய அரசாங்கமும் முடிவு செய்யவில்லை. இன்னும் ஒரு வாரத்திற்குள் பரிசிலனை செய்து முடிவுக்கு வரலாம் என்று சொல்லப்படுகிறது. மற்றபடி, காலேஜ் ஏற்படுத்துவதற்கான எல்லா நடவடிக்கைகளும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

Pipe Lights (Tiruchendur)

* 2391 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether any representations have been received from the Tiruchendur, Kayalpatnam, Arumuganeri, Mela Authoor Panchayats for the extension of pipe lines to certain hamlets and streets ?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir.

SRI M. S. SELVARAJAN : Sir, may I know whether any representation has been received from the panchayats and if so, what steps the Government have taken in this regard ?

THE HON. SRI M. A. MANICKAVELU : The Superintending Engineer has been requested to investigate the possibilities of extending the supply to the omitted places. Twenty more fountains have to be provided in Arumuganeri Panchayat. The Superintending Engineer has been asked to prepare and submit approximate estimates for extending the supply to these areas. His report is awaited.

Remodelling of channels (Tirunelveli)

* 2392 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Works be pleased to state the steps taken for strengthening and remodelling the supply canals and channels, sluices, etc., under the Tambarabarni system in Tirunelveli district ?

THE HON. SRI P. KAKKAN : A statement [a] is placed on the table of the House.

---

[a] Printed as Appendix VI on page 1098 infra.

[15th December 1961

SRI M. S. SELVARAJAN: மணிமுத்தாறு திட்டம் நிறைவேற்றப்பட்ட நேரத்திலே சில இடங்களிலே உள்ள புஞ்சை நிலங்களை யெல்லாம், வாடர் ரேட் நஞ்சை புஞ்சைகளை யெல்லாம் நஞ்சைகளாக மாற்றப்பட்டு, லோகலிசேஷன் செய்வதாக அரசாங்கத்தின் சார்பிலே உறுதிமொழி அளிக்கப்பட்டது. இத்தகைய நீர் வரவு கால்கள், வாய்க்கால்கள், முதலியவைகளை புனரமைப்பு செய்வதற்கும் அத்தகைய லோகலிசேஷனுக்கும் ஏதாவது சம்பந்த முண்டா? அது இன்னும் எவ்வளவு காலத்தில் பூர்த்தியாகும்?

THE HON. SRI P. KAKKAN: ஏற்கனவே புஞ்சையாக இருந்தவைகளை யெல்லாம் நஞ்சையாக்க வேண்டுமென்று சொன்னால், அவைகளை எடுத்துக் கொள்வதிலே ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டுதான் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கிறது. அதற்குத் தான் இந்த ஐந்தாண்டுத் திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. அதிலே எடுத்துக்கொண்டு போதுமான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

Grand Anicut canal

* 2393 *Q*.---SRI R. SRINIVASA IYER: Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether there was a breach in the G.A. canal near Alakkudi this year; if so, when;

(*b*) the dimensions of the breach;

(*c*) how long did it take to close the breach and at what cost.

(*d*) what steps are being taken to avoid breaches in the G.A. canal bunds where it flows in an embankment; and

(*e*) whether there is any proposal to line the canal to avoid seepage and breaches and to what length such lining has been completed?

THE HON. SRI P. KAKKAN: (*a*) Yes, Sir. The left bank of the G.A. Canal breached at about 10-30 p.m. on 7th August 1961.

(*b*) The breach was to a width of 20 feet.

(*c*) It took about a week to close the breach and the cost was estimated at Rs. 17,400.

(*d*) and (*e*) Lining of G.A. Canal has so far been done for a total length of 6,000 feet in the embankment portions.

SRI R. SRINIVASA IYER: ஸார், இந்த ஆலக்குடிகருப் பக்கத்திலே வருஷா வருஷம் உடைகிறது. அதை சில பேர்கள் வேண்டுமென்றே உடைத்து வருவதாக வதந்தி ஏற்படுகிறது. நடுவு நேரத்திலே வருஷா வருஷம் இந்த இடத்திலே உடைப்பு ஏற்படுவதால், அதற்கு ஏதாவது ஏற்பாடு பண்ணி இருக்கிறார்களா?